இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

C-CAMP பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான டாக்டர் தஸ்லிமாரிப் சையீத் அவர்கள் கொழும்புக்கு விஜயம்

உயிரணு மற்றும் மூலக்கூற்று தளங்களுக்கான மையத்தின் பணிப்பாளரும் (C-CAMP) பிரதம நிறைவேற்று அதிகாரியுமான டாக்டர் தஸ்லிமாரிப் சையீத் அவர்கள் 2026 செப்டெம்பர் 3 முதல் 4 வரை கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

2. C-CAMP என்ற நிறுவனம் இந்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறையின் ஆதரவுடன் செயல்படும் ஒரு முக்கிய உயிரியல் சார்ந்த விஞ்ஞான ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் உயிரியல் சார் தொழில்முனைவு மையமாகும். இது, 2009 ஆம் ஆண்டு முதல் உயிரியல் விஞ்ஞான துறையில் அதிநவீன ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் ஓர் ஊக்கியாகத் திகழ்கிறது. அத்துடன், நவீன தொழில்நுட்பத் தளங்கள் மூலமாக ஆராய்ச்சி, மேம்பாடு, பயிற்சி மற்றும் ஏனைய பல்வேறு சேவைகளை வழங்குவதன் மூலம், உயிர் விஞ்ஞானம் சார்ந்த ஆராய்ச்சிகளையும் தொழில்முனைவு முயற்சிகளையும் ஆதரிக்கிறது.

3. டாக்டர் தஸ்லிமாரிப் சையீத் அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் கௌரவ பேராசிரியர் கிரிசாந்த அபேசேன மற்றும் பிரதி சுகாதரா அமைச்சர் கௌரவ டாக்டர் ஹன்சக விஜேமுனி, இலங்கை ஜனாதிபதி அவர்களின் விஞ்ஞான மர்றும் தொழில்நுட்ப துறை சிரேஸ்ட ஆலோசகர் பேராசிரியர் கோமிகா உதுகமசூரிய ஆகியோரை சந்தித்து ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தார்.

4. அத்துடன் இலங்கை தனியார் துறையினைச் சேர்ந்த முக்கிய தலைவர்களையும் இவிஜயத்தின்போது டாக்டர் தஸ்லிமாரிப் சையீத் அவர்கள் சந்தித்திருந்தார்.

5. விஞ்ஞான ரீதியான பரிமாற்றங்களை விஸ்தரித்து விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறையில் இந்தியா இலங்கை இடையிலான ஸ்திரமான பங்குடைமையை இவ்வாறான ஈடுபாடுகள் பிரதிபலிக்கின்றன.

6. இந்நிலையில் டாக்டர் தஸ்லிமாரிப் சையீத் அவர்களது விஜயமானது இவ்வாறான பங்குடைமைக்கு வலுவான உயிரியல் விஞ்ஞானம் சார்ந்ததும் தொழில்முனைவு ரீதியானதுமான ஒரு பரிமாணத்தை வழங்குகின்றது. அத்துடன் ஆரம்பநிலை நிறுவனங்கள், தொழில்நுட்பக் கல்வி மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் இரு நாடுகள் இடையிலுமான தற்போதைய ஒத்துழைப்புக்கு வலுவூட்டுகின்றது. விஞ்ஞான ரீதியான ஒத்துழைப்பினை இரு

நாடுகளுக்குமான பயனுள்ள உறுதியான விளைவுகளாக மாற்றுவதற்காக இந்தியாவும் இலங்கையும் கொண்டிருக்கவேண்டிய பொதுவான கடப்பாட்டினையும் இது மீள உறுதிப்படுத்துகின்றது.

.

****

கொழும்பு
23 செப்டெம்பர் 2026